என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதைத்தான் நான் இங்கே தெரிவிக்கிறேன்.

187 வயது வந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி

குறுகிய காலவினா எண். 19 திரு மி. வின்செண்ட் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிகளில் 17 வயது வந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி எப்போது துவங்கும்?

(ஆ) துவங்கப்பட்டு எவ்வளவு காலத்தில் இப்பணி முடிவடையும்

மாண்புமிகு. திரு. ப. குழந்தைவேலு: (அ) 1-6-1981 முதல்.

(ஆ) நான்கு திங்களுக்குள் முடிவடையலாம்.

திரு. மி. வின்செண்ட்: தலைவர் அவர்களே, நகராட்சிகளில் தற்போதுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை என்ன? 18 வயது வந்தவர்களை வாக்காளர் பட்டியலிலே சேர்த்தற்குப் பிறகு வாக்காளர்களின் எண்ணிக்கை எவ்வளவு அதிகரிக்கும் என்று அரசு எதிர்பார்க்கின்றது?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே தற்போதுள்ள வாக்காளர்கள் 37 லட்சம் பேர். இனிமேல் 18 வயது வந்தவர்களுக்கு எல்லாம் துணை வாக்காளர் பட்டியலைத் தயார் செய்தால் ஏறத்தாழ 8 இலட்சம் பேர் அதிகரிக்கலாம்.

திரு. மி. வின்செண்ட்: தலைவர் அவர்களே, நகராட்சிகளில் வாக்காளர் பட்டியல் சேர்க்கும் பணி முடிவடைந்து எவ்வளவு காலத்தில் உள்ளாட்சித் தேர்தலை அரசு நடத்தும். இந்தத் தேர்தலில் வேட்பாளரின் வயது வரம்பு 25-லிருந்து 21 ஆக குறைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 1—6—81-லே ஆரம்பித்து 4 மாதங்களுக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. முடிவடைந்ததற்குப் பிறகு ஆகஸ்ட் திங்கள் முதல் வாரத்தில் ஆரம்ப வெளியீடு செய்யப் பட்டவுடன் 4 உள்ளூர் பிரமுகர்கள் அடங்கிய அரசால் நியமிக்கப் படும் ஒரு குழுவின் ஆய்வுக்கு வைக்கப்படும். அக்குழு தெரிவிக்கும் ஆலோசனைகளையும், விதிமுறைகளையும் பின்பற்றி வாக்காளர் பட்டியல்களில் தக்க திருத்தங்கள் செய்யப்படும், அதற்குப் பின்னால் தான் தேர்தலைப் பற்றி யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு) ஓர் உரையின் தொடக்கத்தில் (* உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]